மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 7]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2018-2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 27–தொழில் துறை

(ஆ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(அ) கோரிக்கை எண் 27–தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018-2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தொழில்துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,147,97,10,000/-, மூலதனக் கணக்கில் ரூ.6,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.162,33,11,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 27, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.*

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,147,97,10,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற